## பத்திரிக்கைச் செய்தி

1. தஞ்சாவூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலகத்தை புகார்தாரர் அணுகி, தன்னுடைய மனையை மனைவியின் பெயரில் மாற்றி வரைமுறைப்படுத்த வேண்டி கொடுத்த மனு மீது நடவடிக்கை மேற்கொள்ள தஞ்சாவூர் BDO அலுவலகத்தை சேர்ந்த AO-1 திரு.பாலகப்ரமணியன், தொகுதி மேம்பாட்டு அதிகாரி (BDO) மற்றும் AO-2 திரு.மகாதேவ் (எ) ராவ், உதவியாளர், BDO அலுவலகம், தஞ்சாவூர் ஆகியோர் ரூ.5,000/- கையூட்டாக கொடுக்க வேண்டும் என வற்புறுத்துவதாகவும் அதனால் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் புகார் அளித்தார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 20.10.2020 பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின்போது AO-1 திரு.பாலசுப்ரமணியன், தொகுதி மேம்பாட்டு அதிகாரி (BDO) மற்றும் AO-2 திரு.மகாதேவ் (எ) ராவ், உதவியாளர், BDO அலுவலகம், தஞ்சாவூர் ஆகியோர், புகார்தாரரிடமிருந்து ரூ.5,000/- கையூட்டாக வாங்கும்போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்கள்.

2. வேலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலகத்தை புகார்தாரர் அணுகி தன்னுடைய விவசாய நிலத்திற்கு மின் இணைப்பு வழங்குவதற்கு வேலூர் மாவட்ட கர்ணம்பட்டு, மின்வாரிய உதவி கோட்ட பொறியாளர் திரு.கார்த்திகேயன், அவர்களிடம், தட்கல் மனுவை கொடுத்ததாகவும், மனுதாரரின் விவசாய நிலத்திற்கு மின் இணைப்பு வழங்க, ஆய்வு செய்வதற்காக ரூ.7,000/- கையூட்டாக கொடுக்க வேண்டும் என வற்புறுத்துவதாகவும் அதனால் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் புகார் அளித்தார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 20.10.2020 பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின்போது வேலூர் மாவட்டம், கர்ணம்பட்டு, மின்வாரிய உதவி கோட்ட பொறியாளர் திரு.கார்த்திகேயன், புகார்தாரரிடமிருந்து ரூ.7,000/- கையூட்டாக வாங்கும்போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.